*செ.வெ.எண். 64* *நாள் - 30.06.2020*

# நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நஞ்சநாடு ஊராட்சியில் இன்று (30.06.2020) கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ் மற்றும் நீலகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹூ இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கிராம ஊராட்சி அளவிலான விழிப்புக் குழுக் கூட்டம் ((COMMUNITY VIGIL PROGRAMME) நடைபெற்றது.

((((()))))

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நஞ்சநாடு ஊராட்சியில் இன்று (30.06.2020) கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர் இன்கோசர்வ் மற்றும் நீலகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹூ இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கிராம ஊராட்சி அளவிலான விழிப்புக் குழுக் கூட்டம் ((COMMUNITY VIGIL PROGRAMME) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கொரோனா நோய் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் அவர்கள் பொதுமக்களிடையே பேசியதாவது,

”தமிழக அரசு கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை காக்கும் வகையில் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறையின்படி, நீலகிரி மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களிடையே சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளும், முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள் அனைத்து கிராம மக்களை சென்றடைய, கிராம ஊராட்சி அளவிலான விழிப்புக் குழுக்கூட்டம் (COMMUNITY VIGIL PROGRAMME) என்ற முறை அமல்படுத்தி,** பழங்குடியின கிராமங்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஊர்த்தலைவர்கள், சமுதாய தலைவர்களுக்கு கொரோனா நோய்த் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, அதனை கிராம அளவில் பொதுமக்களுக்கு தெரிவிக்கவும், உள்ளூரிலுள்ள வழிபாட்டு தலங்களிலுள்ள ஒலிப்பெருக்கி மூலம் **முறையாக முகக் கவசம் அணிவது, அடிக்கடி கை கழுவுவது, சானிடைசர் உபயோகிப்பது, நோய் எதிர்ப்புச் சக்திகளை அதிகரிப்பது** போன்ற விழிப்புணர்வுகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவது ஆகியன இக்கூட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

மேலும் இப்பகுதியிலுள்ள உள்ளூர் கிராமத் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் தங்கள் கிராமத்திற்குட்பட்ட பகுதிகளில் எவையெல்லாம் செய்யலாம், எவையெல்லாம் செய்யக் கூடாது என்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சமூக இடைவெளியை பின்பற்ற பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அந்தந்த பகுதி கடைகளுக்கு அத்தியாவசிய பொருட்கள் வாங்கச் சென்று வரும் பொதுமக்கள் அனைவரும் சமூக இடைவெளியை பின்பற்ற அறிவுறுத்த வேண்டும்.

**தங்கள் கிராமத்திற்கு வெளி மாவட்ட, வெளி மாநிலங்களிலிருந்து எவரேனும் வருகைப் புரிந்தால், உடனடியாக மாவட்ட கட்டுப்பாட்டு மைய எண்.1077-க்கு தகவலை தெரிவிக்க வேண்டும்.**

மேலும் வெளியூர்களில் இருந்து வருகை புரியும் நபர்கள் மற்றும் உள்ளூரில் இருந்து வெளியே சென்று வருபவர்கள் குறித்து, கிராம அளவில் உள்ள வருவாய் அலுவலர்களால் கண்காணிப்பு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

நோய்த் தொற்று உள்ளவர்களின் தொடர்புடைய நபர்களைக் கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்திக்கொள்ள அறிவுறுத்த வேண்டும். மாவட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்படும் கிராம அளவிலான இளைஞர் குழு, கிராம அளவிலான மகளிர் சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்புகள், அனைத்து வணிகர் சங்கங்கள் மற்றும் ஊராட்சித்தலைவர் போன்ற குழுக்களை கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மேலும் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்திகளை அதிகரிக்கும்பொருட்டு, **கபசுரக் குடிநீர், வைட்டமின் சி மாத்திரைகள், ஜிங்க் மாத்திரைகள், ஆர்சனிக் ஆல்பம்** 30 போன்ற நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்த தேவையான அளவு எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வயது முதிர்ந்தோர் மற்றும் இணை நோய்களையுடையவர்களுக்கு மேற்குறிப்பிட்ட மாத்திரைகள் அளிக்கப்பட வேண்டும்.

இக்கிராம ஊராட்சி அளவிலான விழிப்புக் குழுக்கூட்டம் இன்று இங்கு (உதகை ஊராட்சி) தொடங்கப்பட்டு, தொடர்ந்து 4 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இதுபோன்று மாவட்ட நிர்வாகம் எடுக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்." என்றார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின்கீழ் கோவிட்19 நிதி உதவி தொகுப்பு நீலகிரி மாவட்டத்திற்கு ரூ.4.05 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **இந்நிதி ஒதுக்கீடானது நலிவுற்றோர் (ம) மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவி, தனி நபர் தொழில், உற்பத்தியாளர் குழு, தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் குழு கூட்டமைப்பு, இடம் பெயர்ந்து திரும்பிய தொழிலாளர்கள்** என 6 வகையாக பிரிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது. இப்புத்தாக்க திட்டத்தின் துவக்கமாக இன்று 3 பயனாளிகளுக்கு ரூ.1,11,500/- மதிப்பில் நிதி உதவியினை நீலகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் காசோலையாக வழங்கினர்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் வி.சசிமோகன் இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.பாபு, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, உதகை ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திரு.மாயன் (எ) மாதன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பாஸ்கரன், உதகை வட்டார மருத்துவ அலுவலர் திரு.முருகேசன், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரமேஷ் கிருஷ்ணன், திரு.சந்திரசேகர், நஞ்சநாடு ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.சசிகலா உட்பட அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

*வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்*